# நீங்கள் நீங்களாகவே இருங்கள்

**மனன வசனம்**

**இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும் பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். 2பேதுரு 1:5-7.**

**ஆராய்ச்சிக்கு**

**2பேதுரு 1:1-15;**

**எபே 2:8;**

**ரோமர் 5:3-5;**

**எபிரெயர் 10:38;**

**ரோமர் 6:11;**

**1கொரி 15:12-57.**

மே 20 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

எவ்வளவு அதிகமான சத்தியத்தை, குறிப்பிட்ட கொஞ்ச இடத்திற்குள் 'அடக்கமுடிகிறது' என்பதுதான் புதிய ஏற்பாடு குறித்த ஆச்சரியமான விஷயங்களில் ஒன்றாகும். இந்தவாரப்பாடத்தைஎடுத்துக்கொள்வோம்; 2பேதுரு 1:1-14 வசனங்களை ஆராயப்போகிறோம். இந்த 14 வசனங்களில், விசுவாசத்தினால் நீதிமானாவது பற்றி பேதுரு போதிக்கிறார். பிறகு, இயேசுவுக்கு தங்களை அர்ப்பணித்திருப்போரின் வாழ்க்கையில் தேவ வல்லமையால் என்னவெல்லாம் செய்யமுடியுமென்பதைக் கூறுகிறார். நாம் இந்த உலகத்தின் இச்சைக்கும் சீர்கேட்டிற்கும் தப்பி, 'திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாக' முடியும் என்கிற அற்புத சத்தியம்பற்றியும் கூறுகிறார். 2பேதுரு 1:4.

கிறிஸ்தவ நற்புண்களைப் பட்டியலிடுவதோடு மட்டுமல்லாமல், தனிச்சிறப்பான ஒரு வரிசையில் அவற்றை பேதுரு கூறுகிறார். ஒன்றன்பின் ஒன்றாக, ஒன்றன்பின் ஒன்றாடு அவற்றைச் சொல்லி, இறுதியாக மிகவும் முக்கியமான நற்குணத்தைக் கூறுகிறார்.

நம்பழைய பாவங்களிலிருந்து 'சுத்திகரிக்கப்பட்டு' கிறிஸ்துவில் வாழ்கிற வாழ்க்கை உண்மையில் எப்படியிருக்கும் என்பதையும் எழுதுகிறார். 2பேதுரு 1:9. பிறகு, இரட்சிப்பின் நிச்சயம்பற்றியும், கர்த்தருடைய 'நித்திய ராஜ்யத்தில்' நித்தியமாக வாழப்போவது குறித்த வாக்குறுதியையும் கூறுகிறார். 2பேதுரு 1:11.

இறுதியாக, மிகமுக்கிய தலைப்பான மரித்தோரின் நிலை குறித்த ஒரு சிறு போதனையும் இருக்கிறது. பதினான்கே வசனங்களில் எவ்வளவு ஆழமான, வளமான சத்தியம் பேசப்படுகிறது!

*2017, மே 27 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

## அருமையான விசுவாசம்

***இயேசு கிறிஸ்துவுக்குள் நமக்கு என்ன கொடுக்கப்பட்டிருப்பதாக 2பேதுரு 1:1-4ல் பேதுரு கூறுகிறார்? அதாவது, கிருபையின் நிஜத்தை இங்கு நாம் எவ்வாறு காணமுடிகிறது?***

---

'எங்களைப்போல அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு' அல்லது 'எங்களைப் போன்ற மதிப்புயர்ந்த நம்பிக்கையைப் பெற்றுள்ளோருக்கு' இந்தக் கடிதத்தை எழுதுகிறேன் என்பதாக பேதுரு ஆரம்பிக்கிறார். 2பேதுரு 1:1. 'அருமையான' என்கிற வார்த்தையானது 'சரிசம மதிப்புவாய்ந்த', 'சரிசம சிலாக்கியமுடைய' என்கிற அர்த்தத்தில் பயன்பட்டுள்ளது. இந்த அருமையான விசுவாசத்தை தாங்கள் 'பெற்றதாக' கூறுகிறார்; அதை தாங்கள் சம்பாதித்ததாகவோ, தகுதியால் பெற்றதாகவோ கூறவில்லை; தேவனிடமிருந்து ஓர் ஈவாகப் பெற்றதாகக் கூறுகிறார். பவுல் எழுதுவதுபோல், 'கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு.' எபே 2:8. இது அருமையானது; ஏனெனில், 'விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்.' எபி 11:6. விசுவாசத்தால்தான் அநேக அற்புத வாக்குறுதிகளை நாம் பற்றிக்கொள்கிறோம்.

ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் இயேசுவின் 'திவ்விய வல்லமை' நமக்குத் தந்திருப்பதாக பேதுரு வலியுறுத்துகிறார். 2பேதுரு 1:3. தேவ வல்லமையால்தான் நாம் உயிரோடிருக்கிறோம்; அவருடைய வல்லமையால்தான் நாம் பரிசுத்தத்தைப் பெறுகிறோம். 'தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே' இந்த திவ்விய வல்லமை நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 2பேதுரு 1:3; யோவான் 17:3.

தேவனில் நாம் அன்புகூரவேண்டுமாம்; ஆனால், நாம் அறியாத ஒரு தேவனிடம் எவ்வாறு அன்புகூரமுடியும்? இயேசுவினாலும், எழுதப்பட்ட வார்த்தையாலும், சிருஷ்டிக்கப்பட்ட உலகத்தாலும், விசுவாசமும் கீழ்ப்படிதலுமுள்ள வாழ்க்கையின் அனுபவத்தாலும் நாம் தேவனை அறிந்துகொள்கிறோம். தேவனை அறிந்தபிறகு, அவர் நம் வாழ்க்கையில் செயல்படுவதை நம் அனுபவத்தில் காண்கிறோம்; அந்தப் புரிந்துகொள்ளுதல் நம்மை மாற்றுகிறது. மெய்யாகவே அவர் நம்மேல் அருளியிருக்கும் கிருபையின்மூலம் நாம் அவரை அறிகிறோம்.

இன்னும் அற்புதமான ஒரு விஷயத்தையும் பேதுரு கூறுகிறார்; 'மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும்' நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது; 'திவ்விய சுபாவத்தில்' பங்குபெறுவதும் அதில் அடங்கும். 2பேதுரு 1:4. ஆதியில் மனிதர்கள் தேவசாயலில் படைக்கப்பட்டார்கள்; அந்தச் சாயல் பெருமளவிற்கு சீர்கெட்டுவிட்டது. மறுபிறப்பு அனுபவத்தில், இயேசுவில் புதுவாழ்வைப் பெறுகிறோம்; தம் தெய்வீக சாயலை மீண்டும் நமக்குப் பெற்றுத்தர அவர் கிரியை செய்கிறார். அந்த மாற்றம் நம்மில் நிகழவேண்டுமானால், உலகத்தின் இச்சைகளுக்கும் சீர்கேட்டிற்கும் தப்பித்து ஓடவேண்டும்.

---

உங்களுக்கு விசுவாசம்மாத்திரம் இல்லாதிருந்தால், உங்கள் வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருக்கும்? ஏன் விசுவாசம் ஓர் அருமையான ஈவு?

# கிறிஸ்தவ நற்குணங்களின் நோக்கம் அன்பு

**திங்கள்**
**மே 22**

***2பேதுரு 1:5-7; ரோமர் 5:3-5; யாக் 1:3,4; கலா 5:22,23 ஆகிய வசனங்களில் காணப்படும் பொதுவான கருத்து என்ன?***

பண்டைய காலங்களில் தத்துவ ஞானிகள் நற்குணங்களைப் பட்டியலிட்டுச் சொல்வது வழக்கமான ஒன்றுதான். 'நற்குணங்களின் பட்டியல்கள்' என்று அவற்றை அழைப்பார்கள்; புதிய ஏற்பாட்டிலும் அதுபோல பல உள்ளன. ரோமர் 5:3-5; யாக் 1:3,4; கலா 5:22,23. பேதுரு யாருக்கு எழுதினாரோ அவர்கள் அத்தகைய பட்டியல்கள்பற்றி நன்கு அறிந்திருக்கவேண்டும்; ஆனாலும், ஒரு தத்துவ ஞானி போடும் பட்டியலுக்கும், பேதுரு போட்ட பட்டியலுக்கும் வித்தியாசங்கள் இருந்தன. ஒன்றிலிருந்து மற்றது விளைவதாகவும், இறுதியாக அன்பில் அது முடிவதாகவும் பேதுரு பட்டியலிடுகிறார்.

**பேதுரு கூறுகிற நற்குணங்கள் ஒவ்வொன்றும் அர்த்தம் மிகுந்தது.**

**விசுவாசம்:** இயேசுவுக்குள் இரட்சிப்புக்கேதுவான ஒரு நம்பிக்கை கொள்வதைதான் இங்கு அவர் குறிப்பிடுகிறார். கலா 3:11; எபி 10:38.

**தைரியம் (நற்பண்பு):** இதற்கான கிரேக்க வார்த்தை அரிட். நற்பண்புகளை மேன்மையானவையாக அஞ்ஞான தத்துவஞானிகளும்கூட போற்றினார்கள். ஆம், விசுவாசம் முக்கியமானதுதான்; அது வாழ்க்கை மாற்றத்திற்கு வழிநடத்தவேண்டும்; அப்போதுதான் நற்பண்புகள் பிறக்கும்.

**ஞானம்:** பொதுவான ஞானம்பற்றி பேதுரு கூறவில்லை; இயேசு கிறிஸ்துவோடு இரட்சிப்புக்கேதுவான ஓர் உறவை வைத்திருப்பதால் பிறக்கும் ஞானம் பற்றிப் பேசுகிறார்.

**இச்சையடக்கம்:** முதிர்ந்த கிறிஸ்தவர்கள் மட்டுமீறிய நடத்தைகளுக்குத் தூண்டும் உணர்வுகளை அடக்கத்தெரிந்தவர்களாக இருப்பார்கள்.

**பொறுமை/சகிப்புத்தன்மை:** சோதனைகளும் உபத்திரவமும் உண்டாகும்போது, சகிப்புத்தன்மையோடு நடந்துகொள்ளுதல்.

**தேவபக்தி:** அஞ்ஞான உலகிலும்கூட, கடவுள் நம்பிக்கையின் விளைவாக உருவாகிற ஒழுக்கம்தான் 'தேவபக்தி' என்று எண்ணப்பட்டது; அதற்கான வார்த்தைதான் தேவபக்தியென இங்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எனவே புதிய ஏற்பாட்டின்படி, மெய்யான ஒரே தேவனை விசுவாசிப்பதால் உண்டாகும் ஒழுக்கம்தான் தேவபக்தி. 1தீமோ 2:2.

**சகோதர சிநேகம்:** கிறிஸ்தவர்கள் ஒரே குடும்பத்தினர்; தேவபக்தியானது ஒருவரிலொருவர் அன்போடு இருக்கும் ஒரு சமுதாயத்தை உருவாக்கவேண்டும்.

**அன்பு:** உச்சக்கட்டமாக அன்பை பேதுரு கூறுகிறார். 'இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது' என்கிற பவுலின் வார்த்தைகள் பிரதிபலிக்கின்றன. 1கொரி 13:13.

நற்குணங்களைப் பட்டியலிடும்முன்பு, இவற்றைப் பெற்றுக்கொள்ள 'அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய்' முயலவேண்டும் என்கிறார். 2பேதுரு 1:5. அதன் அர்த்தம் என்ன? தேவபக்தியோடும் உண்மையோடும் வாழவிரும்புகிறவர்கள் என்ன செய்தாகவேண்டும்?

## நீங்கள் நீங்களாகவே இருங்கள்

கிறிஸ்தவர்கள் ஜாக்கிரதையோடு தேடவேண்டியவற்றைப் பட்டியலிட்டு விட்டு, அதன் விளைவு என்னவாக இருக்கும் என்பதை பேதுரு கூறுகிறார்.

***ஒரு கிறிஸ்தவனுக்காக ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருப்பவற்றிற்கும், அதினிமித்தம் அவன் வாழவேண்டிய விதத்திற்கும் உள்ள தொடர்பு என்ன? 2பேதுரு 1:8-11.***

---

இயேசுவில் தாங்கள் மெய்யாகவே கண்டுகொண்ட புதிய வாழ்க்கையின்படி வாழுமாறு பேதுரு தன் வாசகர்களிடம் கூறுகிறார். விசுவாசம், நற்பண்பு, ஞானம், இச்சையடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதரசிநேகம், அன்பு போன்ற குணநலன்கள் 'உங்களுக்கு உண்டாயிருந்து பெருகும்.' 2பேதுரு 1:8.

ஆனால் இந்தப் புதிய வாழ்க்கையின்படி எல்லாக் கிறிஸ்தவர்களும் வாழாததுதான் பிரச்சனையே. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவில் சிலர் வீணரும் கனியற்றவர்களுமாக இருக்கிறார்கள். 2பேதுரு 1:8. தாங்கள் 'முன்செய்த பாவங்களறச்' சுத்திகரிக்கப்பட்டிருப்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். 2பேதுரு 1:9. எனவே, இயேசுவில் தாங்கள் கண்டுகொண்ட புதிய அனுபவத்தின்படி கிறிஸ்தவர்கள் வாழவேண்டுமென்று பேதுரு கூறுகிறார். கிறிஸ்துவுக்குள் அவர்கள் பாவமன்னிப்பையும் சுத்திகரிப்பையும் திவ்விய சுபாவத்தில் பங்குபெறும் உரிமையையும் பெற்றிருக்கிறார்கள். எனவே அவர்கள் தங்கள் 'அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.' 2பேதுரு 1:10. தாங்கள் முன்நடந்ததுபோல நடந்தாலோ, 'வீணராக' அல்லது 'கனியற்றவர்களாக' இருந்தாலோ, சாக்குப்போக்குச் சொல்ல வழியே இல்லை.

'விசுவாசம்பற்றி அதிகமாகக் கேட்டிருப்போம்; ஆனால், கிரியைகள்பற்றி அதிகமாகக் கேட்கவேண்டும். அநேகர் சொகுசான, வசதிக்கேற்ப, சிலுவை சுமக்காத ஒரு வாழ்க்கை வாழ்ந்து தங்கள் ஆத்துமாக்களையே வஞ்சித்து வருகிறார்கள்.' - *EGW, Faith and Works, p 50.*

***மேலுள்ள வசனங்களில் பேதுரு சொல்லுகிற கருத்தை ரோமர் 6:11ல் பவுல் சொல்லும் கருத்து எவ்வாறு பிரதிபலிக்கிறது?***

---

பவுல், பேதுரு இருவருமே 'நீங்கள் நீங்களாகவே இருங்கள்' என்கிற விதத்தில்தான் பேசுகிறார்கள். நாம் கிறிஸ்துவுக்குள் புதுச்சிருஷ்டிகள், பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்டவர்கள், திவ்விய சுபாவத்தில் பங்குபெறுகிறவர்கள். எனவே, எப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ நாம் அழைக்கப்பட்டிருக்கிறோமோ, அப்படிப்பட்ட வாழ்க்கையை நாம் வாழமுடியும். கிறிஸ்துவைப்போல வாழ்வதற்கு நாம் முயலவேண்டும்; அதுதான் கிறிஸ்தவனின் அடையாளம்.

நீங்கள் எவ்வாறு 'கிறிஸ்துவைப்போல' இருக்கிறீர்கள்? இன்னும் என்னென்ன விஷயங்களில் நீங்கள் மாறவேண்டியுள்ளது?

‘நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எனக்கு அறிவித்தபடி நான் என் கூடாரத்தைவிட்டுப்போவது சீக்கிரத்தில் நேரிடுமென்று அறிந்து, இந்தக் கூடாரத்தில் நான் இருக்குமளவும் உங்களை நினைப்பூட்டி எழுப்பிவிடுவது நியாயமென்று எண்ணுகிறேன்.’ 2பேதுரு 1:13,14. 1956ல், ‘ஆத்துமாவின் அழியாமையா, மரித்தோரின் உயிர்த்தெழுதலா? புதிய ஏற்பாட்டின் சாட்சி’ என்கிற தலைப்பில் ஆஸ்கர் கல்மேன் என்பவர் ஓர் சிறிய ஆய்வுப் புத்தகம் எழுதினார். உயிர்த்தெழுதல்பற்றிய கருத்தோடு, ஆத்துமா அழிவில்லாதது என்கிற கருத்து ஒத்துப் போகவில்லை. மேலும், மரித்தோரின் நிலைகுறித்து புதிய ஏற்பாடு பொய்சொல்கிறது என்று சொன்னார்.

‘என் வெளியீடுகளில் இந்த அளவுக்கு ஆர்வத்தையோ கடும் எதிர்ப்பையோ உண்டாக்கியது வேறு எதுவும் அல்ல’ என்று பின்னர் அதைப்பற்றி எழுதினார்.

***மரணத்தில் என்ன நிகழ்கிறதென 1கொரி 15:12-57ல் பவுல் கூறுகிறார்?***

---

---

மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றி புதிய ஏற்பாடு சொல்வதைப் படித்துப் பார்த்தபோது, கல்மேன் சொல்வது உண்மை என்கிற முடிவுக்கு பல புதிய ஏற்பாட்டு அறிஞர்கள் வந்தார்கள். உயிர்த்தெழுதல்பற்றிய கருத்து புதிய ஏற்பாடு சொல்வதுதான்; சரீரம் மரித்தபிறகு ஆத்துமா அழியாமல் இருக்கிறது என்கிற கருத்து புதிய ஏற்பாடு சொல்வது அல்ல. உதாரணமாக, தங்களுக்கு பிரியமானவர்களை மரிக்கக்கொடுத்தவர்கள், இரண்டாம் வருகைபற்றிய நம்பிக்கையினால் தங்களைத் தேற்றிக்கொள்ளுமாறு 1தெச 4:16-18ல் பவுல் கூறுகிறார். ஏன்? இயேசு வரும்போது அவர் மரித்தோரை எழுப்புவாரே! உயிர்த்தெழுதல்பற்றி விலாவாரியாக 1கொரி 15:12-57ல் பவுல் பேசுகிறார். இயேசுவின் உயிர்த்தெழுதலை அடிப்படையாகக் கொண்டுதான் கிறிஸ்தவர்களின் விசுவாசம் அமைந்திருக்கிறதென ஆரம்பிக்கிறார். இயேசு உயிர்த்தெழவில்லை என்றால், அவர்மேல் வைக்கிற விசுவாசமும் வீணாயிருக்கும். ஆனால், மரித்தோரின் முதற்பலனாக மரித்தோரிலிருந்து கிறிஸ்து எழுந்தாரென்று பவுல் கூறுகிறார். மரித்தோரிலிருந்து கிறிஸ்து உயிர்த்தெழுந்ததால், அவருக்குள் மரித்த அனைவரும் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுவதற்கான சாத்தியம் பிறந்திருக்கிறது.

உயிர்த்தெழும் சரீரம்பற்றி 1கொரி 15:35-50ல் பவுல் பேசுகிறார். தற்போது நமக்கிருக்கும் சரீரத்தையும், உயிர்த்தெழுதலில் நாம் பெறப்போகும் சரீரத்தையும் வித்தியாசப்படுத்தி அவர் பேசுகிறார். இப்போது நாம் பெற்றிருப்பது மரித்துப் போகும்; உயிர்த்தெழுதலில் நாம் பெறப்போவது ஒருபோதும் அழியாது.

---

மரணம்பற்றி புதிய ஏற்பாடு பேசும்போது, உயிர்த்தெழுதலை கருத்தில்கொண்டுதான் பேசுகிறதே தவிர, ஆத்துமா அழிவில்லாதது என்கிற அர்த்தத்தோடு பேசவில்லை. 2பேதுரு 1:12-14ஐச் சரியாகப் புரிந்துகொள்ள, இதை அறிந்திருக்கவேண்டியது ஏன்அவசியம்?

***தான் சீக்கிரம் தன் கூடாரத்தைவிட்டு அல்லது சரீரத்தைவிட்டு போகப்போவதாக 2பேதுரு 1:12-15ல் என்ன அர்த்தத்தில் பேதுரு கூறுகிறார்?***

என்ன சூழ்நிலையில் பேதுரு அந்த நிருபத்தை எழுதினாரென்பதை 1பேதுரு 1:12-14 வெளிப்படுத்துகிறது. அதாவது, தான் மரிக்கப்போவதாக பேதுரு நினைத்தார்; அதற்குமுன் தன் கடைசிச் செய்தியை எழுதினார்.

'நான் என் கூடாரத்தைவிட்டுப்போவது சீக்கிரத்தில் நேரிடுமென்று அறிந்து, இந்தக் கூடாரத்தில் நான் இருக்குமளவும்' என்கிற வார்த்தைகள் பேதுரு தான் சீக்கிரம் மரிக்கப்போவதை அறிந்திருந்தாரெனத் தெரிவிக்கின்றன. 2பேதுரு 1:13,14. பேதுரு தன் சரீரத்தை ஒரு கூடாரத்திற்கு ஒப்பிடுகிறார்; எனவே மரிக்கும்போது அந்தக் கூடாரம் நீங்குகிறது. கூடாரத்தைவிட்டுப் போவது என்று அவர் தன் சரீரத்தைதான் குறிப்பிட்டாரென்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. அதனால்தான் சமீபத்திய மொழிபெயர்ப்புகளில், 'நான் இச்சரீரத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் வரை இந்தச் சரீரத்தினின்று விரைவில் நான் நீங்கவேண்டும் என்பதை அறிவேன்' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 2பேதுரு 1:13,14. பேதுரு தன் கூடாரத்தை அல்லது சரீரத்தை 'விட்டுப் போகும்போது' அவருடைய ஆத்துமாமாத்திரம் தனியே வாழ்ந்துகொண்டிருக்கும் என்று அவ்வசனங்களில் எவ்விதத்திலும் சுட்டிக்காட்டப்படவில்லை.

***2பேதுரு 1:12-15 வசனங்களை மீண்டும் வாசியுங்கள். தான் சீக்கிரம் மரிக்கவிருந்தாலும் அந்த நிஜத்தை பேதுரு எவ்வாறு அணுகுகிறார்? விசுவாசம்பற்றி அந்த மனநிலை நமக்குப் போதிப்பது என்ன?***

பேதுருவின் வார்த்தைகளுக்கு அதிக மதிப்பைச் சேர்ப்பதாக 1பேதுரு 1:12-15 வசனங்கள் உள்ளன. தான் சீக்கிரம் மரிக்கவிருந்ததை அறிந்தவராகவே அந்த வார்த்தைகளை அவர் எழுதுகிறார்; 'கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எனக்கு அறிவித்தார்' என்கிறார். ஆனாலும், அவருக்கு எந்தப் பயமோ கவலையோ இல்லை. மாறாக, இந்த உலகத்தில் தொடர்ந்து வாழப்போகிறவர்களின் நலனைக் குறித்துதான் அவர் கவலைப்படுகிறார். 'இப்பொழுது இருக்கிற சத்தியத்தில்' உறுதியாக இருக்கும்படிக் கூறுகிறார். தான் உயிரோடிருக்கும் வரைக்கும் உண்மையோடு வாழ அவர்களை அறிவுறுத்துவதாகவும் சொல்கிறார்.

ஆண்டவரோடு எவ்வளவு ஆழமான, உயிருள்ள ஓர் அனுபவம் பேதுருவுக்கு இருந்தது என்பது தெரிகிறது. சீக்கிரம் மரிக்கவிருந்தார்; அது ஒரு சுமுகமான மரணமாகவும் நிகழவிருக்கவில்லை. பார்க்கவும்: யோவான் 21:18; *EGW, AA, p 537,538*. ஆனாலும் சுயநலமே இல்லாமல், பிறருடைய நலனைமாத்திரமே கருத்தில் கொண்டிருந்தார். தான் போதித்த விசுவாசத்தின்படி வாழ்ந்த ஒருவராக பேதுரு இருந்தார்.

மரணம் என்கிற மோசமான உண்மையை அணுகுவதற்கு நம் விசுவாசம் எவ்வாறு உதவக்கூடும்? இயேசு நமக்காகச் செய்திருப்பதை எண்ணி, மரணத்தின்மத்தியிலும் இந்த அற்புத நம்பிக்கையை நாம் எவ்வாறு பற்றிக்கொள்ளலாம்?

தான் சீக்கிரம் மரிக்கவிருந்ததையும், அந்த மரணம் எப்படிப்பட்டதென்பதையும் பேதுரு அறிந்திருந்தார். 'நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது உன்னை நீயே அரைக் கட்டிக்கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய்; நீ முதிர்வயதுள்ள வனாகும்போது உன் கைகளை நீட்டுவாய்; வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்ட மில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான் என்று மெய்யாகவே மெய் யாகவே உனக்குச் சொல்லுகிறேன்' என்று இயேசு சொல்லியிருந்தார். யோவான் 21:18.

அவர் எப்படி மரித்தார்? 'ஒரு யூதன், அந்நியன் என்பதால் கசையடிகொடுத்து, சிலுவையில் அறையுமாறு பேதுருவுக்கு தீர்ப்புவழங்கப்பட்டது. சோதனை வேளையில் தான் இயேசுவை மறுதலித்த பெரும்பாவத்தை இந்த மரணதண்டனை நினைவூட்டியது. ஒருசமயத்தில் சிலுவையை ஏற்றுக்கொள்ள மனதில்லாமல் இருந்தவர், இப்போது நற்செய்திக்காக தன் ஜீவனை விடுவதை மகிழ்ச்சியாக எண்ணினார்; தன் ஆண்டவரை மறுதலித்த தன்னையும் தன் ஆண்டவரைப் போலவே கொல்லவிருந்ததை பெரும் பாக்கியமாகக் கருதினார். பேதுரு உண்மையாகவே அந்தப் பாவத்திலிருந்து மனந் திரும்பியிருந்தார்; கிறிஸ்துவும் மன்னித்திருந்தார்; தன் ஆடுகளை மேய்க்கும்படி அவருக்குக் கொடுக்கப்பட்ட உன்னதமான ஊழியக்கட்டளை அதைக் காட்டுகிறது. ஆனால் அவரால் தன்னையே மன்னித்துக்கொள்ளமுடியவில்லை. இறுதி வேளைக் காட்சி ஞாபகம் வந்தபோதெல்லாம், தான் மனமாறியதையும் மறந்து அதிக வேத னைக்கு ஆளானார். தன் கடைசி ஆசையாக, தலைகீழே தன்னைச் சிலுவையில் அறை யும்படி தண்டனை கொடுப்பவர்களிடம் கேட்டுக்கொண்டார்.' – *EGW, AA, p 537.* இந்நிலையிலும்கூட, தன் மந்தையின் நலன்குறித்துதான் பேதுரு கவலைப்பட்டார்.

# கலந்துரையாடக் கேள்விகள்

1. *கிறிஸ்தவர்கள் பரிசுத்தமான வாழ்க்கை வாழுமாறு பேதுருவும் வேதாகமத்தின் மற்ற எழுத்தாளர்களும் இவ்வளவுக்கு வலியுறுத்தும்போது, இயேசுவுக்குள் 'வாழவேண்டிய விதத்தில்' வாழாமல் அநேகர் பின்வாங்குவது ஏன்?*

2. *2பேதுரு 1:5-7ல் பட்டியலிடப்பட்டுள்ள நற்குணங்களை வாழ்க்கையில் வெளிப்படுத்த என்னசெய்யலாம்? அதில் பிறருக்கும் எவ்வாறு உதவலாம்?*

3. *பேதுருவின் தோல்விகளுக்குமத்தியிலும், கிறிஸ்து அவருக்குள் மாபெரும் கிரியை செய்திருந்தார். இதிலிருந்து என்ன நம்பிக்கையும் ஆறுதலும் நாம் பெறலாம்?*

4. *'இப்பொழுது இருக்கிற சத்தியம்' என்பது பேதுரு காலத்தில் என்னவாக இருந்தது? உங்களுடைய காலத்தில் என்னவாக இருக்கிறது?*

5. *'உயிரோடிருக்கிறவர்கள் எப்போதும் தங்களில் சுமந்துகொண்டிருக்கும் ஒன்று மரணம்' என்று ஒருவர் எழுதுகிறார். கிறிஸ்தவர்கள் அந்த மர ணத்தை எவ்வாறு 'சுமக்கவேண்டும்'?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.

அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.